இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப் பீடம்
இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித் துறை
இயற்கை விஞ்ஞானத்தில் கல்வி இளமாணி சிறப்புப் பட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022
5 வது மட்டம்
இறுதிப் பரீட்சை – 2022
STU5328/STU5314– கல்வி வழிகாட்டலும் ஆலோசனை சேவையும்
காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 03.12.2022 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

இவ் வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.

பகுதி - I இன் சகல வினாக்களுக்கும் பகுதி- II இன் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பகுதி – I

i. இலங்கையில் பாடசாலைக்கு வெளியே நடைபெறும் கல்வி வழிகாட்டல் ஆலோசனை சேவையொன்றின் பெயரினைக் குறிப்பிட்டு அவர்களால் வழங்கப்படுகின்ற இரண்டு (02) சேவைகளையும் சுருக்கமாக விளக்குக.

ii. ஆலோசனை கூறலின் பிரதான நெறிமுறைகள் (Ethics in Counselling) மூன்றினைப் (03) பட்டியற்படுத்தி அவற்றில் ஒன்றின் (01) முக்கியத்துவத்தினை விளக்குக.

iii. ஆலோசனை கூறலின் உளப்பகுப்பாய்வு அணுகுமுறையின் பிரதான இரண்டு (02) நோக்கங்களை சுருக்கமாக விளக்குக.

iv. தொழில் உலகிற்கு வெற்றிகரமாக பிரவேசிப்பதற்கு பிள்ளைகள் நிபுணத்துவம்பெறும் வகையில் பாடசாலையினால் வழங்கமுடியுமான ஐந்து (05) பிரதான திறன்களை பட்டியற்படுத்துக.

v. இரண்டாம்நிலை பாடசாலைகள் சிறுவர்கள் ஆலோசனை வழிகாட்டல் சேவையைப் பெறவேண்டியமைக்கான இரண்டு (02) காரணங்களை சுருக்கமாக விளக்குக.

vi. பிள்ளைகளின் நடத்தை பிரச்சினையில் செல்வாக்கு செலுத்துகின்ற பாடசாலை சூழல் தொடர்பான ஐந்து (05) காரணிகளை குறிப்பிடுக.

vii. உள ரீதியாக பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு உதவும் வகையில் ஒரு ஆசிரியரால் பயன்படுத்தக்கூடிய இரண்டு (02) உபாயங்களை சுருக்கமாக விளக்குக.

viii. கற்றல் இயலாமையுடைய பிள்ளைகளுடன் தொடர்புபட்ட வகையில் ஐந்து (05) குறிப்பான பண்புகளை குறிப்பிடுக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9.

i. ஆலோசனை கூறல் என்ற எண்ணக்கருவினை உங்களது சொந்த மொழிநடையில் விளக்குக.

(03 புள்ளிகள்)

ii. இரண்டு காரணிகளைக் குறிப்பிடுவதன் மூலம் இலங்கை சூழலியலில் போதைப்பொருள் மற்றும் மதுபாவனை ஆலோசனை சேவையின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

iii. கோவிட்-19 நிலைமையானது பிள்ளைகளுக்கு கல்வி வழிகாட்டல் ஆலோசனை சேவையின் தேவையினை உருவாக்கியது. மேற்குறித்த கூற்றினை நான்கு (04) காரணங்களுடன் நியாயப்படுத்துக.

(12 புள்ளிகள்)

10.

i. பாடசாலை சூழலியலை கருத்தில் கொண்டதாக பொருத்தப்பாடு என்ற எண்ணக்கருவினை உதாரணமொன்றின் மூலம் சுருக்கமாக விளக்குக.

(03 புள்ளிகள்)

ii. கற்றலில் பிரச்சினையை எவ்வகையில் பொருத்தப்பாட்டினது தேர்ச்சி இட்டுச்செல்கிறது? பொருத்தமான உதாரணம் ஒன்றின் மூலம் விளக்குக

(05 புள்ளிகள்)

iii. நான்கு (04) உபாயங்களை குறிப்பிடுவதன் மூலம் பிள்ளையின் சிறந்த பொருத்தப்பாடுள்ள ஆளுமை விருத்திக்கு எவ்வகையில் உதவலாம் என்பதை விளக்குக.

(12 புள்ளிகள்)

11. தற்காலத்தில் பாடசாலை முறைமையில் சிக்கலான நிலைமை வளர்கின்றமையானது பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையின் தீவிர தேவையின்பால் உட்படுத்தியுள்ளது?

i. முதலாம் நிலைப் பாடசாலை (Primary School) மாணவர்களுக்கு ஆலோசனை வழிகாட்டல் வழங்குவதன் தேவையை உருவாக்கியுள்ள பாடசாலை முறைமையுடன் தொடர்புபட்ட வகையில் மூன்று (03) காரணிகளைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

ii. பொருத்தமான உதாரணமொன்றினை குறிப்பிடுவதன் மூலம் ஏன் பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவை தொடர்ச்சியாக இடம்பெறுதல் வேண்டும் என்பதனை சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. பாடசாலை ஆலோசனை சேவையின் மூன்று (03) ஒழுங்கமைப்பு மாதிரிகளைப் பெயரிட்டு மூன்று (03) காரணிகளைக் குறிப்பிடுவதன் மூலம் உமது பாடசாலைக்கு மிகப் பொருத்தமான மாதிரியை விளக்குக.

(08 புள்ளிகள்)

12.பாடசாலை முறைமையில் பயன்படுத்தப்படுகின்ற ஆலோசனை நுட்பங்களை பரிசோதனைசார்/ பரிசோதனைசாரா என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்''

i. பிரச்சினைக்கு முகங்கொடுக்கும ஒரு பிள்ளை தொடர்பாக தரவு சேகரிப்பதற்காக ஒரு குறித்த நுட்ப முறையில் மாத்திரம் ஆசிரியருக்கு தங்கியிருக்க முடியாது என்பதற்கான மூன்று (03) காரணிகளைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

ii. பாடசாலை சமூகத்திற்கு வழிகாட்டல் ஆலோசனை சேவையினை வழங்கும் போது அவதானிப்பு நுட்ப முறைகளை பயன்படுத்துவதன் நன்மைகளை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

iii. அவதானிப்பதன் ஊடாகப் பெறப்பட்ட தகவல்களை எவ்வகையான இரண்டு (2) அறிக்கையிடல் (Report) முறையில் முன்வைக்கலாம் என்பதனை ஒவ்வொன்றிற்கும் உதாரணங்கள் குறிப்பிடுவதன் மூலம் விளக்குக.

(06x02=12 புள்ளிகள்)

13.

i. கல்வி வழிகாட்டல் ஆலோசனை சேவையின் மூன்று (03) நோக்கங்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

ii. தொழில் தெரிவில் எலி ஜீன்ஸ்பேர்க் (Eli Ginzburg) இன் கோட்பாட்டின் தத்துவங்களை சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. எலி ஜீன்ஸ்பேர்க் இன் கோட்பாட்டின்படி தொழில் தெரிவின் மூன்று (03) நுட்பங்களைக் குறிப்பிட்டு அம்மூன்று கட்டங்களிலும் உங்களது மாணவர்களை தொழில் உலகிற்கு தயார்செய்யும் போது உங்களால் எவ்வாறு இலகுபடுத்தலாம் என்பதனை சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

மொத்தப் புள்ளிகள் 100

*பதிப்புரிமை பெற்றது*